# துறைமுகம் தொகுதியில் 15,700 நபர்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, அக். 30 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேற்று மொத்தம் 15,700 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு நேற்று (29.10.2024) செவ்வாய்கிழமை, காலை / மாலை இருவேளையும் துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 54, 54அ, 54ஆ, 57, 57அ, 59, 59அ ஆகிய வட்டங்களை சார்ந்த 8,500 நபர்களுக்கும் மற்றும் 55, 55அ, 55ஆ, 56, 56அ, 60, 60அ ஆகிய வட்டங்களை சார்ந்த 7,200 நபர்களுக்கும் என மொத்தம் 15,700 நபர்களுக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தொகுதி பொறுப்பாளர் இரா.நரேந்திரன், பகுதி கழக செயலாளர்கள் எஸ் முரளி, எம். விஜயகுமார், எஸ். ராஜசேகர், ஜி.எம்.தேவன், இசட். ஆசாத், பி.ஸ்ரீராமுலு, என். பி.எம்.ஷேக் அப்துல்லா, இப்ராஹீம் கனி, ஆர்.கலைசெல்வி, டி.போஸ், பா. ஜெகதீஷ், பி.விஜயகுமார், எம். விநாயகம், பிரதி ப்குமார், எல்.சம்பத்குமார், ராஜேஷ்ஜெயின், வெ.பரிமளம், எல்.நவீன், துறைமுகம் கிழக்கு பகுதி வட்ட கழகச் செயலாளர்கள்: எல்.சத்திய நாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், துறைமுகம் மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: எம். ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி. ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், லண்டன்.முருகன் மற்றும் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி உள்ள பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் 54, 54அ, 54ஆ, 57, 57அ, 59, 59அ ஆகிய வட்டங்களை சார்ந்த பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே சேகர்பாபு 8500 நபர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் தொகுதி பொறுப்பாளர் இரா.நரேந்திரன், பகுதி கழக செயலாளர்கள்: எஸ் முரளி, எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன். இசட் ஆசாத், பி.ஸ்ரீராமுலு, என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, இப்ராஹீம் கனி, ஆர்.கலைசெல்வி. டி.போஸ். பா.ஜெகதீஷ். பி.விஜயகுமார். எம்.விநாயகம். பிரதிப்குமார். எல்.சம்பத்குமார். ராஜேஷ்ஜெயின், துறைமுகம் மேற்கு பகுதி வட்டகழக செயலாளர்கள்: எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், லண்டன்.முருகன் மற்றும் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணி புரியும் பணியாளர்கள் மற்றும் ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. இனிப்பு உள்ளிட்ட நல உதவிகள் வழங்கி தீபாவளி வாழ்த்து தெரிவித்தார். அருகில் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், சாலவாக்கம் ஒன்றியச் செயலாளர் டி.குமார், பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கழக முன்னோடிகள் உள்ளனர்.

## தென்காசியில் மருத்துவ முகாம்!

தென்காசி, ஆக. 30 –

கழக 75 வது பவளவிழா ஆண்டை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க மற்றும் சென்னை கற்பக விநாயக மருத்துவக் கல்லூரி, கற்பக விநாயக பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச மெகா சிறப்பு மருத்துவ முகாம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வைஷ்ணவி மஹாலில் மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா தலைமையில் தென்காசி மக்களவை உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் முன்னி லையில் நடைபெற்றது. முகாமில் நோயாளி ஒருவருக்கு கண் சிகிச்சை அளிக்கப்பட்டது. உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தங்கவேலு, சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ., செண்பகவிநாயகம், தமிழ்ச்செல்வி, சங்கரபாண்டியன், ம.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# முரண்களை வெல்லும் திராவிடம்!

மொழி, இனம், மதம், நாடு என எல்லாவற்றையும் தாண்டி, உலக மக்கள் அனைவரையும் நேசிக்கும் திராவிடம்! ஆனால், தமிழ், தமிழர் உரிமைகளை ஒருநாளும் விட்டுக் கொடுக்காது!

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று உரத்து முழங்கும் திராவிடம். ஆனால், பிறப்பின் அடிப்படையிலான சாதியின் பெயரால் ஒருவர் ஒடுக்கப்பட்டிருந்தால், அவர் சாதியை அறிந்து அவருக்கு சாதியின் பெயரால் இடஒதுக்கீடு வழங்கும்!

'ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே தேர்தல்' என்னும் குரலை என்றும் எதிர்க்கும் திராவிடம்! ஆனால், 'ஒன்றே குலம், அனைவருக்கும் ஒரே சுடுகாடு' என்பதை மகிழ்ந்து வரவேற்கும்!

'கோயிலுக்குப் போகாதே, பகுத்தறிவுப் பாதையைத் தேர்ந்தெடு' என்று சொல்லும் திராவிடம்! ஆனால் கோயிலுக்குப் போக விரும்பும் ஒருவரின் உரிமையை யாரேனும் தடுத்தால், தடுக்கப்பட்டவரின் கைகளைப் பிடித்துக் கோயிலுக்குள் அழைத்துச் செல்லும்!

'பெண்களே உங்களுக்கு மட்டும் ஏன் தாலி? தமிழர் திருமணத்தில் தாலி என்பது இடையில் வந்த பழக்கம்' என்று அறிவுறுத்தும் திராவிடம். ஆனால், இசை வேளாளர் சமூகத்தில் பிறந்த பெண்கள் தாலி கட்டிக்க கொள்ளக் கூடாது என்று சொன்னால், ஏன் என்று கேட்டு அவர்களின் கழுத்தில் தாலி கட்டச் சொல்லும்!

ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னனைக் கொண்டாடும் திராவிடம்! ஆனால் தமிழ் மன்னர்கள் என்னும் ஒரே காரணத்திற்காக, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, ராஜசூயம் வேட்ட பெருநற் கிள்ளி ஆகிய மன்னர்களின் ஆரியப் பண்பாட்டின் அடிமைத்தனத்தை என்றும் ஏற்காது!

இவற்றை முரண்கள் என்று கருதுவோர், திராவிடக் கோட்பாட்டின் அடித்தளத்தை அறிந்து கொள்ளாதவர்கள் என்றே பொருள்!

(26.10.2024 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற 'திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்க' தொடக்க விழாவில்.....)



அன்புடன்
**சுப.வீரபாண்டியன்**
தலைவர் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை

### எழும்பூர் தொகுதி, ஆர்.கே.புரம் திட்டப் பகுதி

# குடியிருப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்!!

சென்னை,அக்.30-

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி அவர்கள், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, புரசைவாக்கம், பிரிக்ளின் சாலையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ரூ.23.15 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட 168 குடியிருப்புகளைக் கொண்ட இராதாகிருஷ்ணபுரம் திட்டப் பகுதி-I அடுக்குமாடிக் குடியிருப்பினைத் (G+5) தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக் காட்சி வழியாகத் திறந்து வைத்தார்.

அவ்வமயம் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அக்குடியிருப்பு வளாகத்தில் குத்து விளக்கு ஏற்றி வைத்து, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-3-க்குட்பட்ட இராதாகிருஷ்ணபுரம் திட்டப் பகுதியில் சிதிலமடைந்த நிலையில் இருந்த பழைய குடியிருப்பு இடிக்கப்பட்டு, தற்பொழுது ரூ.23.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத் தளம் மற்றும் ஐந்து தளங்களில் (G+5) 168 வீடுகளைக் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக் காட்சி வழியாக நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர், உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

ஒவ்வொரு குடியிருப்பும் ஹால், படுக்கை அறை, சமையல் அறை, குளியல் அறை மற்றும் கழிவறை ஆகியவற்றை உள்ளடக்கி, 400 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. மேலும், இக்குடியிருப்பு வளாகம் முழுவதும் கான்கிரீட் சாலைகள், மழைநீர் வடிகால்கள், தெருவிளக்குகள், குடிநீர், கழிவு நீர்க் குழாய், மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் மக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டு உள்ளன.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் குத்துவிளக்கு ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கிய இந்நிகழ்வில், எழும்பூர் வடக்குப் பகுதி செயலாளரும் சென்னை மாநகராட்சி நியமனக் குழு உறுப்பினருமான சொ.வேலு, 99-வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி, 99-வது வட்டச் செயலாளர் ஆர். எம்.ரங்கநாதன், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.காந்தி, கமலக்கண்ணன், 108-வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 77 'அ' வட்டத் துணைச் செயலாளர் ஆர்.ஆரோக்கியம், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.சிலம்பரசன், 108 'அ' வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 58 'அ' வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எல். சுகுமாரன், முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் விஜயபோஸ், எம்.இ.தேவநிதி, நாகராஜ், கோமகன், பாக முகவர் கவிதா, எட்டு என்கிற விஜயகுமார், கே.பி.பார்க் சதிஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

### வட்டச் செயலாளர் கே.அங்குசாமி தலைமையில்

# மாதவரம் 15வது வட்டம் மணலி புதுநகர் மாநகராட்சி பள்ளிக்கு நல உதவிகள்

## புழல் எம். நாராயணன் வழங்கினார்

சென்னை, அக். 30 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 15வது வட்டம் மணலி புதுநகரில் அமைந்துள்ள, சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி மாணவ மாணவிகள் அமர்வதற்கு படுக்கை விரிப்புகள் திமுக சார்பில் வழங்கப்பட்டது,

பொன்னேரி சட்டமன்ற தொகுதி, 15வது வட்டம் மணலி புதுநகர் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளியில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மற்றும் வட்ட செயலாளர் கே. அங்குசாமி, பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் பள்ளி வளர்ச்சி குழு நிர்வாகிகள் ஒருங்கிணைந்து பள்ளி வளர்ச்சி குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அரசு உயர்நிலைப் பள்ளியில் அமைந்துள்ள சத்துணவு கூடம், விளையாட்டு மைதானம் மற்றும் வகுப்பறைகள் ஆகியவற்றில் உள்ள அடிப்படை வசதிகள் குறித்து பணியாளர்கள் பள்ளி மாணவ மாணவிகளிடம் விசாரித்து உடனடியாக தீர்வு கண்டனர்.

சில வகுப்பறைகளில் பழுதடைந்து இருந்த மின் விசிறி மற்றும் மின்விளக்குகளை சரி செய்ய, மாநகராட்சி மின் உதவி பொறியாளரிடம், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் கோரிக்கை வைத்ததன் காரணமாக உடனடியாக பழுது நீக்கி மின்விளக்குகளையும், மின் விசிறி நிலையம் பணியாளர்களைக் கொண்டு சரி செய்து கொடுத்தனர்.

சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி வகுப்பறைகளில் ஆய்வு மேற்கொண்ட போது இரண்டு வகுப்பறைகளில் ஆய்வு மேற்கொண்டு கீழே அமருவதற்கு படுக்கை பாய்விரிப்புகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வட்டச் செயலாளர் கே. அங்குசாமி ஆகியோர் மேற்படி வகுப்பறைகளுக்கு 20 பாய்களை பள்ளி ஆசிரியர்களிடம் வழங்கினார்கள்.

இந்த நிகழ்வில் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபாலகிருஷ்ணன், சி .எம். ராஜா, பிரபு,பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் மற்றும் பள்ளி வளர்ச்சி குழு நிர்வாகிகள் தலைவர் மகாலட்சுமி, சாந்தி, பொன் பிரியா, பாரதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



மாதவரம் அரசு பகுதி,பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, 15வது வட்டம் மணலி புதுநகர் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி பள்ளிக்கு நல உதவிகளை வட்டச் செயலாளர் கே.அங்குசாமி தலைமையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். எஸ்.கோபாலகிருஷ்ணன், சி.எம்.ராஜா, பிரபு, எஸ்.எம்.சி. தலைவர் மகாலட்சுமி, சாந்தி, பொன் பிரியா, பாரதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 75வது ஆண்டு பவள விழா தொடர்ந்து கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் வார்டு கழக செயலாளர்கள் வார்டு நிர்வாகிகள் மற்றும் நகர மற்றும் வார்டு கழக இளைஞர் அணி மாணவர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்து பரிசு பொருட்கள் மற்றும் பரிசுத்தொகை நகர கழக செயலாளர் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர்மன்றத் தலைவர் எம்.கே.டி. கார்த்திக் தண்டபாணி வழங்கினார்.

### மொழிப்போர் தியாகி

# தீரர் தீனனின் 47-வது நினைவு தினம்!

## கழகத்தினர் நினைவஞ்சலி!

சென்னை, அக்.30 -

சைதாப்பேட்டையில் 47 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற அறப்போராட்டத்தில் காவல் துறையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியான தீரர் தீனனின் நினைவு நாள் நிகழ்ச்சி இன்று அவரது இளவலும் 169 அ வட்டக் கழகப் பொருளாளருமான டி.கண்ணன் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அறிவிப்பின்படி 30.7.1977 அன்று நடைபெற்ற கிண்டி ஹால்டா அருகில் நடைபெற்ற அறப்போராட்டத்தின்போது,

கருப்புகொடி அறப்போராட்டத்தில் கலந்து கொண்ட தீரர் தினன் அவர்கள் அன்றைய காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியாகி கழகத்திற்காக தன் உயிரையே பலிகொடுத்தார்.

அன்னாரின் நினைவைப் போற்றும் வகையில் தீரர் தீனனின் இளவல் டி. கண்ணன் சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டக் கழகப் பொருளாளர் ஏற்பாட்டில் இன்று ( 30-10- 2024) 47 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி அவரது இல்லத்தில் நடைபெறுகிறது.

இதில் தீனனின் திருவுருவப் படம் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டு, கழகத்தினர் மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்துகின்றனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சென்னை தீனன்
## அக்டோபர் 30 (1977)



சென்னை, சைதாப்பேட்டை, முனியப்பிள்ளை சத்திரத்தைச் சேர்ந்த இவர், இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு தீவிரமாகப் பணியாற்றியவர்.

1977ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்ததற்கிணங்க, சென்னையில் நடைபெற்ற பேராட்டத்தில் கறுப்புக் கொடி ஏந்தி களம் கண்டபோது, அன்றைய ஆட்சியாளரின் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**